1971 ஜூலை 29] [திரு. க. அன்பழகன்]

சட்டத்தின் பல்வேறு பகுதிகள், விவரங்கள் இவற்றையெல்லாம் மேலும் நல்லமுறையில் இணை ஆய்வுக் குழுவில் ஆராயப்பட்டு இந்தப் பேரவையின் முன்னால் வைக்கப்படும் என்கிற உறுதியை எடுத்துக் கூறி, இந்தச் சட்ட முன்வடிவு இணை ஆய்வுக் குழுவுக்கு அனுப்பப்படவேண்டும் என்ற என் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு **என் உரையை** முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன் உள்ள கேள்வி :—

" தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவர்கள் சட்ட முன்வடிவை (சட்டப்பேரவை சட்டமுன்வடிவு எண். 25/1971) ஆய்வு செய்வதற்காக பதினெட்டு உறுப்பினர்கள் அடங்கிய (12 சட்டப்பேரவை உறுப்பினர்களும், 6 சட்ட மேலவை உறுப்பினர்களும்) இணை ஆய்வுக் குழு ஒன்றை அமைக்க சட்ட மேலவையின் இசைவைப் பெறுவதுடன், இவ்விணை ஆய்வுக்குழுவில் கீழ்க்கண்ட பேரவை உயுப்பினர்கள் பணியாற்ற தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். "

1. மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து
2. திருமதி ஜோதி வெங்கடாசலம்
3. திரு. மணலி சி. கந்தசாமி
4. திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்.
5. திரு. ஏ. சுப்பிரமணியம்.
6. டாக்டர் எச். வி. ஹாண்டே
7. திரு. ஏ. சுவாமிதாஸ்
8. திரு. நா. வீராசாமி
9. திரு. பெ. மலைச்சாமி
10. திரு. எஞ். முருகையன்
11. திரு. க. உரொ. எட்மண்ட்
12. திரு. ப. முத்துசாமி

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

MR. DEPUTY SPEAKER: Under Rule 139 (1) of the Assembly Rules, I nominate the Minister for Public Health as a Member of the Joint Select Committee.

(8) அறிவிப்பு—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஒருங்கிணைந்த மருத்துவப் பயிற்சியாளர்கள் பதிவு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண். 26/1971.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஒரு அறிவிப்பு. தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஒருங்கிணைந்த மருத்துவப் பயிற்சியாளர்கள் பதிவு (திருத்த) சட்டமுன்வடிவை பேரவையின் ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.